செய்தி வெளியீடு எண் : 1578 நாள் : 12.09.2022

## செய்தி வெளியீடு

சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் சென்னை மாவட்டத்தில் இயங்கும் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர்களுக்கு, அரசின் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இன்று (12.09.2022), சென்னை, மயிலாப்பூர், கச்சேரி ரோட்டில் அமைந்துள்ள ஜீம்மா மசூதியில் சுமார் 200 உலமாக்களுக்கு (ஆண்கள் 180 + பெண்கள் 20) மிதிவண்டிகள் மாண்புமிகு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ்.மஸ்தான் அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சுமார் 200 உலமாக்களுக்கு ரூ.10, 31,340/– மதிப்பிலான அரசின் மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. த.வேலு அவர்கள், சென்னை மாமன்ற 125ஆவது வார்டு உறுப்பினர் திருமதி அ.ரேவதி அவர்கள், வக்ஃபு வாரியத் தலைவர் திரு. அப்துல்ரஹமான் அவர்கள், சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் டாக்டர் சீ.சுரேஷ் குமார்,இ.ஆ.ப., மற்றும் சென்னை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு. ஆ.இளங்கோ மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

| **உலமாக்களுக்கான மிதிவண்டிகளின் மதிப்பீடு** | | | |
|---|---|---|---|
| **உறுப்பினர்கள்** | **எண்ணிக்கை** | **ரூபாய்** | **மொத்தம்** |
| ஆண்கள் | 180 | 5175 | 9,31,500 |
| பெண்கள் | 20 | 4992 | 99,840 |
| நிகர மொத்தம் | 200 | 10,167 | 10,31,340 |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in